# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2019.10.11 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம்
## (திருத்தம்)

**2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** *இவ்வாசகம், 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஏதேனும் கைத்தொழிலில் அல்லது சேவையில் உள்ள வேலையாளொருவரின் தேசிய குறைந்தபட்ச மாதாந்த வேதனம் மற்றும் தேசிய குறைந்தபட்ச நாளாந்த வேதனம் என்பவற்றை முறையே பன்னிரெண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவாகவும், ஐந்நூறு ரூபாவாகவும் அதிகரிப்பதாகும்.*

**வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம்**
**(திருத்தம்)**

ச.வ. - ஒ. 25/2019

## 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதன (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்.

**2.** இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "பத்தாயிரம் ரூபாவாதல் வேண்டுமென்பதுடன், ஒரு வேலையாளின் தேசிய குறைந்தபட்ச நாளாந்த வேதனம் நானூறு ரூபாவாதலும் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பன்னிரெண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவாதல் வேண்டுமென்பதுடன், ஒரு வேலையாளின் தேசிய குறைந்தபட்ச நாளாந்த வேதனம் ஐந்நூறு ரூபாவாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.